# இராமாபுரம் பாதாள சாக்கடை திட்டம்

- இராமாபுரம் பாதாள சாக்கடை திட்டம், ரூ.48.50 கோடி மதிப்பீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வந்தது. ஒப்பந்ததாரரின் மோசமான செயல்திறனால் ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டது. மீதமுள்ள பணிகளை மேற்கொள்ள ரூ.32.29 கோடிக்கு மறு ஒப்பந்தம் கோரப்பட்டது.

- **பாதாள சாக்கடை திட்டம் கீழ்கண்ட முக்கிய பணிகளைக் கொண்டுள்ளது.**

1) 47059 மீ. கழிவுநீர் குழாய் அமைத்தல்
2) 1927ஆள்நுழைவு வாயில் அமைத்தல்
3) 5805 மீ. விசைக்குழாய் அமைத்தல்
4) 5 கழிவுநீரிறைக்கும் நிலையம் அமைத்தல்
5) 6797 வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கும் பணிகள்.

- **கழிவுநீரிறைக்கும் நிலையம் அமையும் இடங்கள்:**

1. தமிழ் நகர்
2. ஆலங்குளம்
3. எஸ்.ஆர்.எம் காலேஜ் (பாரதி சாலை, இராமாபுரம்)
4. அம்மன் நகர்
5. எஸ்.ஆர்.எம் இறுதி நிலை கழிவுநீரிறைக்கும் நிலையம்

- **ஒப்பந்தத்தின் விவரங்கள்:**

ஒப்பந்த பணிகள் ரூ.4165 இலட்சத்திற்கு 30 மாதத்தில் பணி முடிக்க M/s. GKC Vishwa Consortium 21.08.2013 அன்று கொடுக்கப்பட்டது. இப்பணி 21.02.2014 அன்று தொடங்கப்பட்டு, 20.08.2016 அன்று முடிக்க உத்தேசப்பட்டது. ஒப்பந்த காலம் நீடிக்கப்பட்டு பணிகள் தொடர்ந்து நடைபெற்று வந்தது. ஒப்பந்ததாரரின் மோசமான செயல்திறனால் 10.11.2018 அன்று ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டது. மீதமுள்ள பணிகளை மேற்கொள்ள மறு

ஒப்பந்தம் கோரப்பட்டு ரூ. 2512.08 இலட்சத்திற்கு பணி ஆணை M/s. Mohan Power Infrastructure Private Limited consortium with M/s. C.S. Constructions-க்கு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

- **பணிகளின் தற்போதைய நிலை**

  1) தற்போது 77 விழுக்காடு பணிகள் முடிவடைந்துள்ளது.

  2) இது வரை இத்திட்டத்திற்கு ரூ.37.21 கோடி நிதி செலவிடப்பட்டுள்ளது.

  3) அனைத்து பணிகளையும் 30.11.2022 க்குள் முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

  4) இத்திட்டத்தின் மூலம் சுமார் 80,500 மக்கள் பயன் பெறுவார்கள்.